IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

STC No.1093/2025

Deposition of Witness PW4

Name : மாதேஷ்வரன் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஈரோடு நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று அரச்சலூர் கிராமம் வீரப்பம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 29.03.2025 அன்று ஈரோடு நகர காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது 11 மணிக்கு உயர் அதிகாரிகளின் உத்தரவின் படி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டு காவலர்கள் அன்பரசு, மாதேஸ்வரன் ஆகியோருடன் தகுந்த உபகரணங்களுடன் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக நேதாஜி ரோடு மணிக்கூண்டு, சின்னா வீதி, மோசிக் ஜின்னா வீதி ஆகிய இடங்களில் கண்காணித்தும், 12 மணிக்கு புது அக்ரஹார வீதியில் உள்ள தபால் நிலையம் எதிரில் உள்ள காலி இடத்தில் கண்காணிக்கும் போது ஏற்கனவே குற்ற வழக்கில் கைது செய்து நீதிமன்ற பிணையில் வெளியில் வந்து எங்களது கண்காணிப்பில் கண்காணித்து வரும் திருநாவுக்கரசு

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.03.26 10:56:17 +0530

என்பவர் அந்த இடத்தில் சந்தேகப்படும்படி நின்று இருந்தவரை சுற்றிவளைத்து பிடித்து விசாரிக்கும் போது தான் விற்பனைக்காக கஞ்சாவை வைத்திருப்பதாக ஒப்புக் கொண்டவரை தகுந்த சம்மன் சார்வு செய்து வாங்க மறுத்தவரை கைது செய்து, அவரை சோதனை செய்வதற்கு சோதனை விருப்ப கடிதம் தயார் செய்து அவரிடம் கையொப்பம் பெற்று பின்னிட்டு,அவர் வைத்திருந்த பாலித்தீன் பொட்டலத்தை ஆய்வு செய்தபோது அதில் தலை, பூ, காய், தண்டு ஆகியவற்றுடன் கூடிய கஞ்சா இருந்தது.

அதை தீ வைத்து முகர்ந்து பார்த்ததில் கஞ்சா வாடை வீசியது. பின்பு அங்கிருந்த சாட்சிகள் மாரியப்பன், சரவணன் ஆகியோர் முன்னிலையில் இந்த பொட்டலத்தில் உள்ள கஞ்சாவை நாங்கள் கொண்டு சென்ற டிஜிட்டல் தராசில் எடை போட்டு பார்க்க 270 கிராம் இருந்தது. அதை மகஜரில் கைப்பற்றி சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். **சோதனை விருப்ப கடிதம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பிறகு 13 மணிக்கு எதிரி மற்றும் கைப்பற்றிய தடய சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.77/2025, சட்டப்பிரிவு. 123 BNS, 8(c), 20(b)(ii)(A) NDPS Act படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து பின்னிட்டு எதிரியை தக்க வழி காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிறகு கைப்பற்றிய தடயச் சொத்தை ஆய்வு அறிக்கைக்காக நீதிமன்றம் மூலம்

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.26 10:56:23 +0530

வேண்டுகோள் கடிதம் கொடுத்து ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னிட்டு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு மேலும் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பினை ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்திலிருந்து தராசை எடுத்துச் சென்றதற்கு ஆய்வாளரிடம் அனுமதி பெற்றேனா என்றால் அது நாங்கள் தனிப்பட்ட முறையில் வைத்திருக்கும் தராசு ஆகும். அ.சா.ஆ.4 சோதனை இசைவு கடிதம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் யார் மூலமாக எத்தனை மணிக்கு எடுத்துவரப்பட்டது என்றால் எங்களுடன் வந்த காவலர் மாதேஷ் என்பவர் மூலம் 12.20 மணிக்கு காவல் நிலையம் அனுப்பி வைத்து காவல் நிலையத்தில் உள்ள பிரிண்டர் மூலம் 12.25 மணிக்கு பிரிண்ட் எடுத்து வரப்பட்டது. கைப்பற்றுதல் மகஜரும் காவல் நிலையத்திலிருந்து பிரின்ட் எடுத்து வரப்பட்டு தான் கையொப்பம் பெறப்பட்டது. கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பம் செய்த நபர்களிடம் வழக்கு சம்பந்தமாக சாட்சி கையொப்பம் செய்வதற்கு எழுத்து மூலமாக ஏதாவது கடிதம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் தங்களது விசாரணையில் எதிரியிடமிருந்து கஞ்சாவை கைப்பற்றியதாக சொல்லவில்லை என்றும், தங்கள் முன்னிலையில் எடை போட்டதாக தான் சொல்லி உள்ளார்கள் என்றால் சரியல்ல ஒரு நபர் என்று சொல்லி உள்ளார்கள்.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.26 10:56:30 +0530

எதிரி மீது ஏற்கனவே குற்ற கண்காணிப்பில் இருந்து வந்ததால் எதிரியை காவல் நிலையம் வரவழைத்து எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பாலித்தீன் பையை நாங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.03.26 10:56:36 +0530